



**நகர் ஊரமைப்புத்துறை (DTCP)**

**திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்**

**கண்ணுடையான்பட்டி ஊராட்சி**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், கண்ணுடையான்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்:178/2 மற்றும் 178/4A-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண்: 9WULA1QR   நாள்: 09.07.2025   வ

அளவு கோல்: 1:400

குறிப்பு:

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு (As Per Patta) | : | 0.9143 ஏக்கர் (அ) 3700.00ச.மீ |
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு (As Per Document) | : | 0.91 ஏக்கர் (அ) 3682.64ச.மீ |
| ஒதுக்கிய மனைகள் | : | 18 |
| மனைப்பிரிவின் எல்லை | : | |
| நிலையிலுள்ள சாலை | : | |

பொது ஒதுக்கீடுகள்:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

1. மனைப்பிரிவின் பரப்பளவு = 3700.00 ச.மீ
2. ஒப்படைக்கப்பட்ட மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு (தான ஆவணம் எண்:7517/2025,நாள்:03.09.2025) = 1318.20 ச.மீ
3. ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)x10% = (3700.00 - 1318.20)x10% = 238.18 ச.மீ

10% பூங்கா பரப்பான 238.18 ச.மீ பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் படி உரிய தொகை ரூ.35,775.00/- அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் நாள்:08.09.2025 அன்று செலுத்தப்பட்டது.

4. பொது உபயோகம்

(A). உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x 0.5% = (3700.00 - 1318.20) x 0.5% = 11.91 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு (தான ஆவணம் எண்:7517/2025 நாள்:03.09.2025) = 44.20 ச.மீ (1.86%)

(B). TANGEDCO - க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x 0.5% = (3700.00 - 1318.20) x 0.5% = 11.91 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு (தான ஆவணம் எண்:7517/2025 நாள்:03.09.2025) = 44.60 ச.மீ (1.87%)

மூலை முடக்கு :-

12.0மீ அகல வரையிலான சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

12.0மீ முதல் 30.5மீ வரையிலான சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

கட்டிட வரம்பு :-

9.0 மீ அகல வரையிலான சாலைகளுக்கு 1.50மீ -ம் விடப்படல் வேண்டும்.

9.0 மீ முதல் 18.0மீ அகல வரையிலான சாலைகளுக்கு 3.0மீ -ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்:18 ந.நி(ம)கு.வ.துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 ந.நி(ம)கு.வ.துறை நாள்.31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள், உள்ளாட்சி மற்றும் TANGEDCO-விற்கான பொது ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. அரசாணை எண். 181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020- ன்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார்சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. அரசாணை எண். 141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022- ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியபட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைகுண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.
9. மனைப்பிரிவின் ஊடே செல்லும் உயர் அழுத்த மின்கம்பி -யினை (HT-LINE) மனைப்பிரிவின் உத்தேச சாலையின் போக்கிற்க்கு ஏற்ப மனுதாரர் தமது சொந்த செலவில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**ம.வ/ந.ஊ.இ.இ(தி.மா) எண் : 153/2025**

**(இணையதள ஒப்புதல்)**

**(இ-சைன் செய்யப்பட்டது)**

இணை இயக்குநர்(மு.கூ.பொ)/உதவி இயக்குநர்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

Signature Not Verified

Signed by Assistant Director
Location: Tiruchirappalli
Date:2025.09.10 13:03:39

அளவர்/உதவி வரைவாளர்   வரைவாளர் நிலை - III   திட்ட உதவியாளர்